## பிப்ரவரி - 22

**"நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்"**

**- எபி 13 : 5**

சுய நலமான ஜெபங்கள் வீணாணவைகள், சிலர் செல்வத்தை ஆதாயம் பண்ணி சத்தியத்தையும் அதன் ஊழியத்தையும் இழந்துவிட்டார்கள் சிலர் ஆரோக்கியத்தை ஆதாயம் பண்ணி அம்முயற்சியில் அதோடு மற்ற மிகவும் துயரமான சோதனைகளை சம்பாதித்திருப்பதை மாத்திரம் கண்டார்கள். சிலர் தங்களுக்கு பிரியமானவர்களை மரணத்தின் வாயிலிருந்து திரும்ப பெற்று கொண்டிருக்கிறார்கள் இவர்கள் எல்லோரும் பிறகு, தேவன் தங்களுடைய ஜெபங்களை கேட்கவில்லை என்று எண்ண விரும்புகிறார்கள் அல்லது மிகவும் சரியாக சொல்லப்போனால், அவர்கள் கர்த்தருடைய ஞானத்தையும் பராமரிப்புகளையும் நம்பிக்கையோடும், திருப்திகரமாகவும், குறை சொல்லாமலும் ஏற்று கொண்டதாக எண்ணவும் விரும்புகிறார்கள். ஆவிக்குரிய இஸ்ரவேலர் தங்களிடத்திலுள்ள பொருட்களை தேவனுடைய ஈவாக நன்றி தெரிவித்தலுடன் ஏற்றுக் கொண்டு அவைகளை ஞானமாக உபயோகிக்க வேண்டும். ஆனால் அவர்களுடைய ஞானமாக உபயோகிக்க வேண்டும். ஆனால் அவர்களுடைய விண்ணப்பங்களை பொறுமையுடன் கூடிய சகிப்பையும் இருதய திருப்தியையும் கொண்ட ஆவிக்குரிய ஈவுகளுக்காக செய்யப்பட வேண்டும்.

**- Z '02, 250 (R 3061).**

கிறிஸ்தவனுக்கு அவனுடைய ஜீவியம் பொருளாசையுள்ள ஜீவியமாக இருக்கும் பொழுது, அது அவனை சுய நலக் காரணாக ஆக்கிவிடுவதோடல்லாமல், மற்றவர்களுக்குக் கெடுதி செய்யவும் அது அவனைத் தூண்டும். ஆகையால், மற்றவர்களுடைய நன்மைக்கென்று எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும் என்கிற மிகவும் உயர்ந்த நோக்கம் கொண்டுள்ள ஒருவரிடத்தில் விருத்திச் செய்யப்பட வேண்டிய குணம் பொருளாசை அல்ல. நம்மிடத்திலுள்ளவைகளுடன் இருக்கிற மனரம்மியத்தின் ஆவி, பொருளாசையின் குணத்தின் மேல் நல் நடத்தைக்கும் ஆரோக்கியத்திற்கும் அனுகூலமான கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது என்பதை நிரூபிக்கும்.

**- P '34, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 18:21; 20:17; யோபு 31:24,25,28; சங் 10:3; 119:36; நீதி 11:24; 21:25,26; 23:4,5; 30:8; ஏசா 5:8; மத் 6:19-21,24,25,31-33; 16:26; 1தீமோ 6:6-10; சங் 37:16; நீதி 16:8; 17:1; பிர 4:6; 1கொரி 7:17,20-22,24; பிலி 4:11,12;

**கோபுர வாசிப்பு** : Z '11, 349 (R 4876).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் இச்சையுள்ளவனாக அல்லது திருப்தியுள்ளவனாக இருந்தேனா? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்ன பலனோடு?